

சாத்தான்குளம் பேரூராட்சி தைகாதெரு, தச்சமொளி, தெற்குரதவீதி ஆகிய பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளில் பொதுமக்களுக்கு முதலமைச்சர் அவர்களின் நிவாரண தொகை ரூ.6000/ த்தை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்.



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் கேம்பலாபாத், சேத்துக்கான் வாய் கான், மாரமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்துகுறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

பிரசாதம் - அன்னதானத்தின் தரத்தினை உறுதிப்படுத்தி 523 திருக்கோயில்களுக்கு ஒன்றிய அரசின் தரச் சான்றிதழ்கள்!

# தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து - அமைச்சர் பி.கே. சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, ஜன.2-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (31.12.2023) சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்தினை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில், மதுரை, அழகர்கோயில் கள்ளழகர் திருக்கோயில், இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில் மற்றும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்து பக்தர்களுக்கு பிரசாதங்களை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின் படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இது திராவிட மாடல் ஆட்சி என்பதை நிரூபிக்கின்ற வகையில் இந்து சமய அறநிலையத்துறையில் பக்தர்களின் தேவைகளை அறிந்து, இளைஞர்களுக்கு முழுமையாக அவர்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து பணிகளையும் செய்து தருகிற ஒரு ஆட்சியாக ஒன்றிய துணைக்கண்டத்தில் முதலமைச்சர் அவர்களின் ஆட்சி திகழ்கிறது என்றால் அது மிகை ஆகாது. அந்த வகையில்திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் முதல் முதலில் துவங்கப்பட்டது.

தற்போது 15 திருக்கோயில்களில் வழங்குகின்ற நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திரு க்கோவில், இராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில், மதுரை கள்ளழகர் திருக்கோயில் என்று ஐந்து திருக்கோயில்களில் இன்றைக்கு பிரசாதம் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு இருக்கின்றது. இத்திட்டம் நடைமுறையில் இருக்கின்ற 20 திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்திற்கு ஆண்டுதோறும் 25 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கின்றது.

### முழுநேர அன்னதானத் திட்டம்!

அதேபோல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் ஏற்கனவே 2 கோயில்களில் இருந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு திருவண்ணாமலை திருச்செந்தூர் உட்பட மேலும் 6 திருக்கோயில்களில் இந்த முழு நேர அன்னதான திட்டத்தை விரிவுபடுத்தி 8 திருக்கோயிலில் அந்த திட்டம் செயல்பாட்டில் இருக்கின்றது. 202324 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கை அறிவிப்பின்படி, பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில், ஆனைமலை மாசாணி அம்மன் ஆனைமலை திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயிலும் முழு நேர அன்னதான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வெகுவிரைவில் தொடங்கி வைக்க உள்ளார். அன்னதானத் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 92 ஆயிரம் பக்தர்கள் உணவு அருந்துகிறார்கள். இந்த திட்டத்திற்கான செலவு ரூபாய் 100 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய திருநாட்களில் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு பாதயாத்திரையாக வருகை தரும் பக்தர்களுக்கு ஒரு நாளைக்கு 10 ஆயிரம் நபர்கள் வீதம் 20 நாட்களுக்கு 2 இலட்சம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில் விசேச நாட்களில் தினம்தோறும் 500 நபர்களுக்கும். திருப்பட்டூரில் வியாழன் தோறும் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கும் நடைபெற்று வருகிறது. அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று போற்றப்படுகின்ற வள்ளலாரின் சன்னிதானத்தில் தைப்பூசத்தன்று 20,000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கிட திட்டமிடப்பட்டு இந்த ஆண்டு அதை தொடங்க இருக்கின்றோம்.

அதோடு மட்டுமல்லாமல் பழனி ஆண்டவர் திருக்கோயிலின் நிர்வா கத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 4,000 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கி கொண்டிருக்கிறோம். இப்படி தமிழகத்தினுடைய திருக்கோயில்களில் பக்தி பசியோடு வருகின்ற இறை அன்பர்கள் வயிற்றுப் பசி இருக்கக் கூடாது என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களில் அறிவித்திருக்கின்ற இந்த அன்னதான திட்டங்களினால் முதலமைச்சர் அவர்களை அன்னதான பிரபு என்று அழைக்கின்ற அளவிற்கு இன்றைக்கு பக்தர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.

### தரச்சான்றிதழ்கள்!

48 முதுநிலை திருக்கோயில்களுக்கும் சிசிடிவி பொருத்தப்பட்டு இந்து சமய அறநிலையத்துறையின் தலைமை அலுவலகத்தில் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம். அதிகமான பக்தர்கள் வருகின்ற திருக்கோயில்களை ஆணையாளர் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார். ஆகவே கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் ஆங்கில புத்தாண்டிற்கு சிறப்பாக பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றோம்.

### சிதம்பரம் திருக்கோயிலில் விதிமீறல்கள்!

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலை பொறுத்தவரை உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி துறை சார்ந்த இரண்டு கூடுதல் ஆணையர்களும், தொல்லியல் துறை சார்ந்த மூன்று பேரும் இணைந்து குழுவாக சென்று முழுமையாக ஆய்வு செய்து இருக்கின்றார்கள். அங்கு சுமார் 30க்கும் மேற்பட்ட விதிமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை முறையாக ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நீதிமன்றத்தில் என்னென்ன விதி மீறல்கள் இருக்கிறது என்பதை சமர்ப்பிக்க இருக்கின்றோம். அதேபோல கனகசபையின் மீது ஏறி தரிசனம் செய்வதற்கு நீதிமன்றத்தில் தடையாணை கேட்டார்கள். உயர்நீதிமன்றம் எந்த விதமான தடையாணையும் தரவில்லை. ஆனால் தொடர்ந்து அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப ஆருத்ரா தரிசனத்தை காரணம் காட்டி நான்கு நாட்கள் கனக சபையின் மீது அவர்களைத் தவிர வேறு பக்தர்கள் யாரும் ஏறி தரிசனம் செய்வதற்கு தடை விதித்திருந்தார்கள். மோதல் போக்கு வேண்டாம் என்பதற்காக நாங்கள் முறையாக காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கின்றோம். நீதிமன்ற உத்தரவை மீறிய அவமதிப்பு வழக்கு தொடரவும் இருக்கின்றோம். இந்த வழக்கு நீதிமன்றத்தில் வருகின்ற போது நடந்த சம்பவங்களை நீதியரசர் அவர்களிடம் விளக்கிட இந்து சமய அறநிலையத்துறை முடிவு எடுத்திருக்கின்றது.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்ட திருக்கோயில்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டுள்ளன. அதற்கான ஒப்பந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜனவரி மாதத்திற்குள் பணிகள் அனைத்தும் முழுமையாக தொடங்கப்பட்டு விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்து சமய அறநிலையத் துறையில் காலி பணியிடங்களை நிரப்புவதை பொறுத்த அளவில் தொடர் முயற்சியாக அதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களி லும், பழனி ஆண்டவர் கலைக் கல்லூரியிலும் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு இருக்கின்றன. இரண்டு மாத காலங்களுக்குள் அந்த பணியிடங்களை நிரப்புவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் வேகப்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முதல் நாளிலேயே பரபரப்பாகக் காட்சியளித்த கிளாம்பாக்கம் பேருந்து முனையம்!

# “விமான நிலையம்போல் உள்ளது கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” என பொதுமக்கள் மகிழ்ச்சி!

## விழாக் காலங்களில் போக்குவரத்து நெரிசலின்றி மக்கள் எளிதாக தென் மாவட்டங்களுக்குப் பயணம்!

செங்கல்பட்டு, ஜன.2-

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து அரசு விரைவு பேருந்துகள் இயக்கம் முழுமையாக தொடங்கியுள்ளது. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை விமான நிலையம் போல தமிழ்நாடு அரசு உருவாக்கியிருப்பதாக பொது மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சென்னையை அடுத்துள்ள கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் 393 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

வெளியூர் செல்லும் SETC எனப்படும் அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகள், கிளாம்பாக்கத்தில்இருந்து நேற்று முன்தினம் முதல் முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன.

முழுமையாக பயன்பாட்டுக்கு வந்த முதல் நாளிலேயே கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் பரபரப்பாக காட்சியளிக்கிறது. கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மூலம், தென்மாவட்டங்களுக்குச் செல்லும் போது பயண நேரம் குறையும் என்றும், விழாக்காலங்களில் போக்குவரத்து நெரிசலின்றி எளிதாக பயணிக்க முடியும் என்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை விமான நிலையம் போல தமிழ்நாடு அரசு உருவாக்கியிருப்பதாகவும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, அரசு விரைவு போக்குவரத்து கழகமான SETC பேருந்துகள் இனி கிளாம்பாக்கத்தி லிருந்துதான் இயக்கப்படும் என்றும் கோயம்பேட்டில் இருந்து SETC பேருந்துகள் இயக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(GFX IN) சென்னையில் இருந்து வெளி மாவட்டங்கள் மற்றும் வெளியூர் செல்லும் மற்றும் வெளியூர்களில் இருந்து சென்னை வரும் SETC விரைவு பேருந்துகள் அனைத்தும் கிளா ம்பாக்கத்தில் இருந்துதான், இயக்கப்படும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சி, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு செல்லும் விரைவு பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து செல்லும். தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம், வேளாங்கண்ணி ஆகிய டெல்டா பகுதிகள், தருமபுரி, ஓசூர் ஆகிய இடங்களுக்கான விரைவு பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்தே புறப்படும்.

மேற்கு மாவட்டங்களான சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய ஊர்களுக்கும் கொடைக்கானல், எர்ணாகுளம், திருப்பதி ஆகிய இடங்களுக்கும் கிளாம்பாக்கத்தில் இருந்துதான் விரைவு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. TNSTC எனப்படும் 6 போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் பொங்கல் பண்டிகை வரை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

காஞ்சிபுரம், ஆரணி, ஆற்காடு, செய்யாறு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, ஓசூர், சேலம், திருப்பதி, நெல்லூர் ஆகிய ஊர்களுக்கான TNSTC பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து புறப்படும். திண்டிவனம், செஞ்சி, வந்தவாசி, திருவண்ணாமலை, போளூர், சேத்பட்டு ஆகிய ஊர்களுக்கும் விழுப்புரம், கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், நெய்வேலி, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களுக்கும் செல்லும் TNSTC பேருந்துகள் மற்றும் இசிஆர் வழியாக பண்ருட்டி, வடலூர், தஞ்சை, கும்பகோணம் ஆகிய ஊர்களுக்கு செல்லும் பேருந்துகளும் பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து இயக்கப்படும். அதன்பிறகு கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும்.

கிளாம்பாக்கத்திலிருந்து ஆம்னி பேருந்துகளின் சேவையும் தொடங்கியுள்ளது. இருப்பினும், ஏற்கனவே முன்பதிவு செய்த பயணிகளின் வசதிக்காக பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து ஆம்னி பேருந்துகளை இயக்கிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதன்பின் கிளாம்பாக்கத்திலிருந்து மட்டுமே ஆம்னி பேருந்துகளை இயக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகரின் பல்வேறு இடங்களிலிருந்து கிளாம்பாக்கம் செல்லவும், கிளாம்பாக்கத்திலிருந்து சென்னை நகருக்குள் வரவும், கோயம்பேடு, பிராட்வே, தாம்பரம், கிண்டி, திருவான்மியூர், பூவிருந்தவல்லி, தியாகராய நகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு அதிக அளவில் மாநகரப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

மாதவரம் - திருப்பதி தேவஸ்தான நகர் -

# கன்னியம்மன் நகரில் நிவாரணப் பொருட்கள்!

## புழல் எம். நாராயணன் வழங்கினார்!

சென்னை, ஜன.2-

மாதவரம் திருப்பதி தேவஸ்தான நகர் கன்னியம்மன் நகர் பகுதியில் நிவாரணப் பொருட்களை புழல் எம்.நாராயணன் வழங்கினார்

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், 17வது வட்டம் வட பெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள திருப்பதி தேவஸ்தான நகர் மற்றும் கன்னியம்மன் நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு, நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன.

சமீபத்தில் மிக்ஜாம் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 17வது வட்டம் வடபெரும் பாக்கம் பகுதியில் அமைந்துள்ள திருப்பதி தேவஸ்தான நகர் மற்றும் கன்னியம்மன் நகர் பகுதியில் வசிக்கக்கூடிய தொழிலாளர்கள் மற்றும் வெளியூரிலிருந்து மேற்படி நகர்களில் தங்கி இருக்கும் பொது மக்கள் வசிக்கக் கூடிய வீடுகளில் புழலேரியில் இருந்து வெளியேறும் உபரி நீரால் தண்ணீர் புகுந்து பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அந்த சமயங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில், சென்னை மாநகராட்சி மற்றும் அரசு அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு மழை நீர் வடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர்.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் அரசு சார்பில் ரூபாய் 6000 நிதி உதவியும் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து திருப்பதி தேவஸ்தான நகர், கன்னியம்மன் நகர் பகுதியில் வசிக்கக்கூடிய பொது மக்களுக்கு அரிசி, புடவை, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்கள், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது

17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், பகுதி பிரதிநிதி சி .மூர்த்தி, வட்ட துணைச் செயலாளர் சி.பாலாஜி, வி. பார்த்தசாரதி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத்,கே.ராஜ்குமார், அரியலூர் முன்னாள் கிளை செயலாளர் நாகராஜ், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணியின் துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், தீயம்பாக்கம் பூபாலன், ஜான்சன், வில்சன், இ. சுதர்சன், வடபெரும்பாக்கம் எம். கோவிந்தன், எம். மைக்கேல், பி. செந்தில், எஸ். தினேஷ், சின்னத்தோப்பு ஜி. முனிவேல், ஜி. முனுசாமி, கொசப்பூர் விஜயன்,தினகரன், முருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டார்கள். நிவாரண உதவியை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் திமுகவினருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

# தமிழ்நாட்டில் 6-ஆம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜன.2-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக தெற்கு அரபிக்கடலின் மத்திய பகுதிகளில் நிலவக்கூடும்.

இதனால் நேற்று தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டத்திற்கு வாய்ப்புள்ளது. நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் உறை பனிக்கு வாய்ப்புள்ளது.

இன்று முதல் 6-ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில்லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-22 டிகிரி செல்சியஸாகவும் இருக்கக் கூடும்.



இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இராமேஸ்வரம் இராமநாதசாமி திருக்கோவிலில் கட்டணமில்லா பிரசாதத்தை பக்தர்களுக்கு நகரக் கழகச் செயலாளரும் நகர் மன்றத் தலைவருமான கே.இ.நாசர்கான் வழங்கினார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரையாண்டு விடுமுறை முடிந்து இன்று (02.01.2024) பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் வேளச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று விரிவான ஆய்வு மேற்கொண்டு பள்ளியில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார் .